# தமிழ்ச்சிட்டு



மடங்கல் 2033
( ஆகத்து - 2002 )

விலை:
உரு.3.00

குரல் 25
இசை 8

சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

# மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்!

மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.
காண்பன எல்லாம் கலைநா கரிகம்!
மாண்பெனப் படுவது மனநா கரிகம்!
அடையும் மாற்றம் அனைத்தும் ஒப்பலாம்!
உடையும் நடையும் மாறலாம்; ஆனால்
உள்ளமும் ஒழுங்கும் உயர்ந்தே இருப்பன.
பள்ளி என்பதோ ஒழுக்கம் பயிலிடம்!
துள்ளும் இளமையின் துடுக்கை அடக்கி
விள்ளும் அறிவெலாம் விளங்கக் கற்றிடும்
கல்விக் கூடம் கலைபயில் கழகம்!

செல்வச் செழுமையின் கல்வியே செழுமை.
விலங்கி னின்று வெளியே றியவன் —
விலங்கினும் உயர்ந்து விளங்கியோன் — மாந்தன்!
விலங்கி னின்று விலகியோன் என்றால்
"விலங்கினும் உள்ளம் விளங்கப் பெற்றவன்;
விலங்கினும் அறிவு விளங்கப் பெற்றவன்;
விலங்கினும் ஒழுக்கம் விளங்கப் பெற்றவன்;
விலங்கினும் பண்பு விளங்கப் பெற்றவன்"
— என்பதே பொருளாம்!
எனவே உளத்தால், அறிவினால், ஒழுங்கால்
இழிந்த ஒருவனை விலங்கே எனலாம்!

இழிந்த ஒருவனை வள்ளுவ ஏந்தல்
"மயிரனை யான்" — என மதிக்கிலா துரைப்பார்.

தலைமயிர்ப் பெருமை தலையொடு வரையே!
தலையினின் றிழியின் தாழ்ச்சியுற் றிழிபடும்!
உயர்ந்துளான் பெருமையும் ஒழுங்குள வரையே!
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே என்க!
குறள்மறை அவனைப் 'பிணம்' — எனக் கூறும்!

'மாந்தன்' என்னும் முழுவடி வத்தின்
ஏந்தும் இளமையே எழில்மிகு பருவம்!
இளமை அழியும்; வாழ்க்கையுந் தாழும்!
இளமைக் கழகே கல்வியை ஏந்தல்!
கல்விக் கழகு கடமையும் ஒழுங்கும்!
ஒழுங்கிலாக் கல்வி உப்பிலாப் பண்டம்!

எண்ணறப் படித்தும் எழுத்தறக் கற்றும்
கண்ணெனும் ஒழுங்கும் கடமையுங் கல்லான்
மக்களில் தாழ்ந்தவன் எனவே மதிக்க!
தக்கவை இவற்றை உளத்து வை தம்பி!
மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

*

தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலை இதழ்

குரல் : 25, இசை : 8

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!"
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

- பாவலரேறு

நிறுவனர் :
பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும் :
'தமிழ்ச்சிட்டு'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை-601 302.
தொலைபேசி எண் : 277 1231

# நிறைய அறி! குறைவாய் உரை!

அகவையான பலர் நிறையப் பேசுவது போல் நமக்குத் தோன்றும் அவர்களும் ஓயாமல் தங்களின் பழங்காலச் செய்திகளை யெல்லாம் பேசுவார்கள். சிலர் பேசியதையே கூடத் திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள்.

அவற்றுள் சில செய்திகள் நமக்கு விருப்பமானவையாக இருக்கும் நாமும் கேட்போம். பல செய்திகள் விருப்பம் இல்லாமல் இருக்கும். நமக்குச் சலிப் பாகத் தோன்றும். நம்மை விட மாட்டார்களா என்றுகூட இருக்கும்.

அப்படித்தான் நம் பேச்சுகளும் சிலருக்கு அவ்வாறு இருக்கும். நாம் 'தொன தொன' என்று பேசுவதாக எண்ணுவார்கள்.

பேசுவது என்பது பெரிய கலை. எப்படி அழகாய் எழுதுகிறார்களோ அப்படி அழகாகவும் பேசலாம். அறிவாய் எழுதுவது போல் அறிவாகப் பேச முடியும்.

அழகில்லாமல் அறிவில்லாமல் எழுதுகிற எழுத்தைப் பார்த்துக் கிறுக்கல் என்று கூறுகிறோம். அதே போல்தான் அழகாக அறிவாக இல்லாமல் பேசு பவனைப் பார்த்துக் கிறுக்கன் என்று கூறிவிடுவார்கள்.

நம்பேச்சுகள் கிறுக்குத்தனமாக இருந்துவிடக் கூடாது. நாம் கிறுக்கர் களும் அல்லர். அழகான எழுத்து

வருவதற்கு நாம் எழுதி எழுதிப் பழகுவது போல், அழகான அறிவான பேச்சு வருவதற்கும் நாம் பேசிப் பழகவேண்டும்.

ஒரு சிறிய செய்தியை வழவழ வென்று நீட்டித்துப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

சுருக்கமாகச் சொல்லிப்பழக வேண்டும்.

பிறர்க்கு விளங்கும்படியும் சொல்லவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான சொற்கள் இருக்கிறபோது, அந்தச் சொற்களிலே எந்தச் சொல் சொன்னால் சரியாக விளங்கிக் கொள்வார்களோ அந்தச் சொல்லைச் சொல்லிப் பழகவேண்டும்.

அதைத்தான் வள்ளுவப் பேராசான் சொல்லின் தொகை அறிந்து சொல்ல வேண்டும் என்கிறார்.

மேலும் ஒன்றைப் பற்றி விளக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொண்டால்தான் நாமும்அதை விளக்கமாகவும் தெளிவாகவும் பேசமுடியும்.

எனவே, ஒன்றைப்பற்றிப் பேசுவதானால் முதலில் அதைப்பற்றி ஆழ்ந்து அகன்று அறிய வேண்டும்.

அப்போதுதான் நிறைவாகவும் அறிவாகவும் நாம் பேசமுடியும்.

நிறைய அறிவோம்! முறையே உரைப்போம்!

## கொவ்வைக் கொடி

கொவ்வைக் கொடியைப் பாருங்கள்! – வேலிக்
கொடியில் படர்வதைப் பாருங்கள்!
கவ்விய அன்பைப் போலவே – அது
விரிந்து படர்வதைப் பாருங்கள்!

கனிந்த் கோவைப் பழங்கள் – அழகு
கனிந்தே தொடர்வதைப் பாருங்கள்!
இனிக்கும் பழத்தை உண்ணவே – அங்கே
இணையும் கிளிகளைப் பாருங்கள்!


முயன்று முயன்று ஏறுதே! – தன்
முயற்சி வாழ்வைத் தேடுதே!
இயற்கை இன்பம் உலகமே! – அதை
இனிக்க இனிக்க உண்ணுங்கள்!

– புலவர் சி. வெற்றிவேந்தன்


# முளரி (ரோஜா) மலரை நீங்களும் செய்யலாம்.

மேலே ஒரு வண்ணத்தாளும், உள்ளே முளரி வண்ணத் தாள்களும் வைத்துச் சுருட்டிக் கொள்ளுங்கள்.

1. படத்தில் உள்ளதுபோல் அந்தத் தாள் சுருளை நடுவில் வெட்டுங்கள்




2




2. அதன் நடுப்பகுதியில் இருந்து இலை வடிவத்தில் வெட்டுங்க

3. உள்ளே இருக்கும் வண்ணத் தாள்களை வட்டமாக வெட்டுங்கள்.

3




A



4. வட்டத்தை
ஒவ்வொன்றாகச் சுருட்டி
நசுக்குங்கள்.


5. சுருளின் நுனியைப்
பிடித்து மெதுவாக
இழுக்கவும்.





6. இதழ்கள் எல்லாப்
பக்கங்களிலும் வரும்படி
செய்யவும்.

7. சுருளை மேலிருந்து
கீழே அழுத்துங்கள்.



இதோ நீங்கள் செய்த முளரி மலர்.

# இரோசிமா

உலக வரலாற்றில் நிலையான தொரு இடம்பெற்ற நகரம் இரோசிமா. முதன்முதலில் அணு குண்டு வீச்சுக்குள்ளாகி அழிந்த நகரம் இது. சப்பான் நாட்டிலுள்ள இந்நகரம், இரண்டாம் உலகப் போரின்போது பேரழிவுக்குள்ளானது எனினும், இன்று மீண்டும் உருவாக்கப்பட்டு அழகிய நகரமாக விளங்குகிறது.

ஆன்ஊ என்ற தீவின் வட பகுதியிலுள்ளது இந்நகரம். இங்கு 8,52,600 மக்கள் வாழ்கின்றனர்.




ஆட்டா என்ற ஆற்றின் கழிமுகப் பகுதியில் 1589இல் இரோசிமா நிறுவப்பட்டது. இந்த ஆறு இவ்விடத்தில் ஏழு கிளைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. இக்கிளையாறுகள் இந்நகரை ஆறு தீவுகளாகப் பிரிக்கின்றன. இத் தீவுகள் ஐம்பதுக்கும் அதிகமான பாலங்களினால் இணைக்கப் பட்டுள்ளன. தொடர்வண்டி, ஆறு, கால்வாய் ஆகிய பல வழிகள் கொண்ட மிக அழகிய நகராக இது அமைக்கப் பட்டுள்ளது.

இங்குக் கப்பல் கட்டும் தளங்கள் பல உள்ளன. கடலிலிருந்து கிடைக்கும் மீன் முதலிய உணவுப் பொருள்க ளுக்கு இது முகாமை வணிக நடுவமாக

விளங்குகிறது. உந்து வண்டிகள் உருவாக்கம்,

அ.மா.(கி.மீ.) பகுதி முற்றிலும் அழிந்தது; 83,000 மக்கள்



**நகரின் இன்றைய தோற்றம்**

உணவுப் பொருள்களைப் பக்குவம் செய்தல், தையல் ஊசிகள் உருவாக்குதல் போன்ற தொழில்கள் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.

இரோசிமா 1894-95, 1900-05இல் நடந்த போர்களின் போது படைத் தளமாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது செருமனிக்குத் துணையாகச் சப்பான் போரில் இறங்கியது.

1945 ஆகத்து 6இல் அமெரிக்கா ஓர் அணுகுண்டை இரோசிமாமீது வீசியது. அதனால் இந்நகரின் 10 சதுர

மாண்டனர். அடுத்து ஆகத்து 9இல் நாகசாகி என்ற மற்றொரு சப்பானிய நகரின்மீது அமெரிக்கா மற்றொரு அணுகுண்டை வீசியது. அணு குண்டுகளால் இரோசிமா, நாகசாகி இரண்டு நகரங்களும் எரிந்து சாம்பலாகி விட்டன. சப்பான் தோல்வியை ஒப்புக்கொண்டு அடி பணிந்தது.

அணுகுண்டின் தீய விளைவுகளால் இறந்த ஆயிரக் கணக்கானவர்களுக்கு இங்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

# அறிவே பெருஞ்சொத்து

க. சண்முகசிதம்பரம்

வாவா தம்பி பொன்னப்பா
வகுப்பில் நடந்தது என்னப்பா?

ஆசான் என்ன சொன்னாரு
அன்பைச் சொல்லித் தந்தாரு.

அடங்காத் தன்மை முடக்கிடுமே
அறிவே நம்மை வளர்த்திடுமே.

பிறரை மதித்தல் பெருமையாம்
பிதற்றித் திரிந்தால் சிறுமையாம்!

இழித்தும் பழித்தும் கூறாதே!
எவர்க்கும் தீங்கு நினையாதே!

உன்னைப் போலப் பிறரையும்
உயர்வாய் எண்ணி வாழ்வாயே!

கூட்டிக் கழித்துச் சொல்லாதே!
குற்றம் வருமிடம் நில்லாதே

அறிவை வளர்க்கக் கற்பாயே!
அன்பின் வழியில் நிற்பாயே!

## விளையாடலாம்

குடுகுடு வென்றே ஓடலாம்
குண்டாய்க் கட்டிப் போடலாம்

விடுவிடு என்றே நடைகாட்டி
வேங்கை போலே பாயலாம்

சடுகுடு ஆட்டம் போடலாம்
சறுக்குப் பனையில் ஏறலாம்!

மடுகுளை நீரில் குதிக்கலாம்
வாரித் தண்ணீர் குடிக்கலாம்!

நெடுநெடு தென்னை மீதினிலே
நெஞ்சம் தேய ஏறலாம்!

*பாவலர் வடிவேலனார்*

# மூடநம்பிக்கை

சாலையில் சென்று கொண்டிருக்கும் பூனை குறுக்கே ஓடினால், செல்லும் வேலை வெற்றி பெறாது என்று சிலர் நம்புகிறார்கள்.

எவரேனும் தும்மினால் அதைத் தீமைக்கான அறிகுறியாகச் சிலர் கொள்கிறார்கள்.




மேனாடுகளில் பலர் 13 என்ற எண் தீமை பயக்கும் என்று நம்புகின்றனர். பொதுவாக அங்குள்ள வீடுகளில் 13 என்ற எண் இருக்காது. 12ஆம் எண்ணுள்ள வீட்டுக்கு அடுத்த வீட்டை 12-அ என்று குறித்துவிட்டு, அதற்கு அடுத்த வீட்டை 14 என்று குறிப்பிடுவர்.

மிகப் பழங்காலத்திலிருந்தே மூடநம்பிக்கைகள் இருந்து வருகின்றன.

பேய், பூதம் முதலியவை இருப்பதாகப் பழங்கால மக்கள் பெரிதும் நம்பினார்கள். இன்று அதற்காக மந்திரங்கள் சொல்லப் படுகின்றன. ஆடு,

கோழி முதலியவை கொலை செய்யப்படப்படுகின்றன. ஒருவர் ஒரு பொருளைப் பார்த்து அழகாக இருக்கிறது என்று கூறினால், அந்தப் பொருளுக்குச் சேதம் உண்டாகும் என்று சிலர் நம்புகின்றனர். அந்தப் பொருளுக்குக் 'கண்ணேறு' பட்டுவிட்டது என்பர். இதைத்தவிர்க்க சில மந்திரங்களையும், பொருள் களையும் பயன்படுத்துவது உண்டு. புது வீடுகளிலும், பயிர்கள் செழித்து வளர்ந்த தோட்டங்களிலும் மாந்த உருவம் போல பொம்மை ஒன்றைச் செய்து வைப்பார்கள்.

சோதிடத்திலும் உலகெங்கும் மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். இருந்தும் அதுவும் மூடநம்பிக்கையே.

மூடநம்பிக்கை எல்லா நாடுகளிலும் இருக்கின்றது.


மக்களுடைய அறிவு வளரவளர இவ்வகை மூட நம்பிக்கைகள் குறைந்து கொண்டே வருவதை நாம் காண்கிறோம்.

## மிகப் பெரும் பல்கலைக்கழகம்

★ சோவியத்து உருசியாவின் தெற்கு மாசுக்கோவில் உள்ள மாசுக்கோ பல்கலைக் கழகம்தான் பெரிய பல்கலைக்கழகம்.

32-அடுக்குமாடிகளையும், 40,000 அறைகளையும் கொண்ட அந்தப் பல்கலைக்கழகம் 1949-53-இல் கட்டப்பட்டது.

★ அதிக மாணவர்கள் படிக்கிற பல்கலைக்கழகம் கல்காத்தா பல்கலைக் கழகம். ஏறத்தாழ இரண்டிலக்கம் மாணவர்கள் படிக்கின்றனர். (1968-69 இலேயே)



# தெரிந்து கொள்ளுங்கள் கொஞ்சம் செய்திகள்

## அறிஞர்களின் கண்டுபிடிப்புகள்

சாமுவேல் மோர்சு —தொலை வரி

சே.எல். பெய்டு—தொலைக் காட்சி

கலிலியோ — தொலை நோக்கி.

அலெக்சாண்டர் கிரகாம்பெல் — தொலைபேசி.

தாமசு ஆல்வா எடிசன் — மின்விளக்கு. திரைப்படம்.

அம்ப்ரி டேவி — சுரங்க அணையா விளக்கு.

## பனிமலையின் உயரமான முகடுகள் (சிகரங்கள்)

பனிமலையின் உயரமான நான்கு முகடுகள்: எவரெசுட்டு. ஆசுடின், கஞ்சன் சங்கா, நங்கபர்வதம்.

## மாழை உடையாது ஏன் ?

மாழையை வெப்பப் படுத்தினால் உடைவதில்லை. கண்ணாடியை வெப்பப்படுத்தினால் உடைந்து விடுகிறது. காரணம் கண்ணாடி ஓர் அரிதில் கடத்தி.

## கப்பல் மூழ்காமல் மிதக்கிறது ஏன் ?

நீரில் ஊசி மூழ்கிவிடுகிறது. ஆனால் கப்பல் மூழ்காமல் மிதக்கிறது ஏன் ? கப்பலால் வெளியேற்றப்படும் நீரின் எடை கப்பலின் எடையைவிட அதிகம். எனவே அது மிதக்கிறது. ஊசியால் வெளியேற்றப்படும் நீரின் எடை ஊசியின் எடையைவிடக் குறைவு எனவே அது மூழ்கிவிடுகிறது.

## நீரில் பனிக்கட்டி மிதப்பதற்குக் காரணம்

நீரில் பனிக்கட்டி மிதப்பதற்குக் காரணம் நீரின் அடர்த்தி பனிக்கட்டியின் அடர்த்தியைவிட அதிகம்.

— தொகுப்பு: புதுவை தமிழ்நெஞ்சன் —

# ஏங்கள் ஊரில் ஒரு தமிழ்ப்பள்ளி.

தந்தை பெரியார் பிறந்த மண்ணாம் ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி பகுதியில் உள்ளது தர்மாபுரி எனும் சிற்றூர். இப் பகுதியில்,

தூங்கும் புலியைப்
பறைகொண்டெழுப்பினோம்
தூய தமிழரைத் தமிழ்
கொண்டெழுப்பினோம்
தீங்குறு பகைவரை
இவணின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி
வேல் கொண்டு தாக்குவோம்

— என்ற புரட்சிப்பாவலரின் பா உணர்வோடு தாய்மொழிக் கல்வியே காலத்தின் தேவை எனும் அறிவியல், வழியில் தாய்த்தமிழ்த் தொடக்கப் பள்ளி கடந்த 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இப் பள்ளியில் மொட்டு, மலர் வகுப்புகள் தொடங்கப்பெற்று குழந்தைகள் வகுப்பறைச் சுவர்க ளுக்குள்ளும், வெளியிலும் மகிழ்ச்சி யோடு விளங்கப் பாடல், ஆடல், விளையாட்டுகள் மூலம் பாடம் கற்பிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதனால் ஒரு குழந்தைக்குத் தாயின் மீது என்ன உணர்ச்சியோ அதே உணர்ச்சி தமிழின்மீதும், பள்ளியின் மீதும் அதே நோக்கோடு ஏற்பட்டது.

இப்பள்ளியை, தாய்மொழித் தமிழ் உணர்வு கொண்ட ஆர்வலர்கள் ஏறத்தாழ 70 பேர் தலைக்கு உரு. 1,000/- முதலீடு செய்து நடத்தி வருகின்றனர்.

இப்பள்ளியைத் தலைமை ஆசிரியை மு. அமுதவள்ளி, ஆசிரியைகள் ஆ. கனிமொழி, ப. தங்கமணி, தாயம்மா, இராசம்மாள் ஆகியோர், பள்ளித் தாளாளர் மொழிக் காவலர் மே.அ. பட்டப்பன் ஆகியோர் மொழி உணர்வோடு நடத்துகின்றனர்.

இத் தாய்த் தமிழ்ப்பள்ளியில் மொட்டு வகுப்பில் (3 அகவை) 35 குழந்தைகளும், 'மலர்' வகுப்பில் 17 குழந்தைகளும், முதல் வகுப்பில் 6 மாணவ, மாணவியர்களும், இரண்டாம் வகுப்பில் 9 மாணவ, மாணவியர்களும், மூன்றாம் வகுப்பில் 4 மாணவ, மாணவியர்களும் தமிழ்மொழியில் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளி செயல்பட, தமக்குச் சொந்தமான இடத்தை மனமுவந்து அன்பளிப்பாக மொழி ஆர்வலர்கள் முதியவர் ப. ஆண்டவன், ஆ. வடிவேல் ஆகியோர் கட்டிட வாய்ப்பைத் தந்து துணை செய்கின்றனர்.

இப்பள்ளி மாணவ - மழலையர்கள், ஆசிரியர்கள், செயல் பணிக் குழுவினர், 'தமிழ்ச்சிட்டு' சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ் பயின்று மனம் உவக்கின்றனர்.

*

# கரூர் சத்தி தமிழ்வழிப் பள்ளி

கரூர் சத்தி(சக்தி) தமிழ்வழிப் பள்ளியில் படிக்கின்ற பிஞ்சுகள் தாம் நித்தியாவும், மோதிலாலும்.

நித்தியா - இப்போது ஐந்தாம் வகுப்பு படிக்கிறாள்.

மோதிலால் - முதல் வகுப்பு படிக்கிறான்.

நித்தியாவின் தாய் தந்தை இருவரும் நெசவுத் தொழிலில் கூலிப் பணி செய்பவர்கள்.

மோதிலால் தாய் தந்தையரும் அப்படியே.

இரண்டாண்டுகளுக்கு முன்பே இருவரும் திருக்குறளின் 1330 குறளையும் பிழையில்லாமல் சொல்லியிருக்கிறார்கள்.

கரூர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டு, அவர் அவர்களை மிகுதியாகப் பாராட்டியுள்ளார்.

கரூர்ப்- பள்ளிக்கூடத்திற்கு அருகில் வாழும் ஆயிரக் கணக்கான மக்களும் குழந்தைகள் திருக்குறள் சொல்வதைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தனர்.

இருப்பினும், தமிழக அரசு அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

அவர்களுக்கு ஊக்கத் தொகையோ, மாதம் மாதம் கொடுப்பதாக அறிவித்த ஆக்கத் தொகையோ கொடுக்கவில்லை.

பள்ளி ஒருங்கிணைப்பாளர் திரு. காமராசு அதற்காக ஆண்டுக் கணக்கில் நடந்தும் பயன் இல்லை.




அந்தக் குழந்தைகளை நாம் வாழ்த்துவோம்.

அந்தக் குழந்தைகளையும், பள்ளி ஒருங்கிணைப்பாளர் காமராசுவையும் பாராட்டி நீங்களும் வாழ்த்து மடல்கள் அனுப்புங்களேன்.

திரு. க.வே. காமராசன்,
சத்தி(சக்தி) தமிழ்வழிப் பள்ளிக்கூடம்,
ஆசிரியர் குடியிருப்பு,
தொழிற்பேட்டை,
கரூர் - 639 004.

# ஈ

கழிவுப் பொருள் குவியலுக்கு மேலே படலம் படலமாக ஈக்கள் பறப்பதை



நாம் எல்லாரும் பார்த்திருக்கிறோம்.

ஈக்கள் தங்கள் இரையை எப்படிக் கண்டறிந்தன என்று நம்மில் வெகு சிலரே சிந்தித்துப் பார்த்திருப்போம். அழுகிய இறைச்சித் துண்டைப் பலகணிக்கு வெளியே எறிந்து பாருங்கள்.

பெரிய தங்க வண்ண ஈக்களின் படலம், இதற்காகவே அவ்வளவு நேரமும் காத்துக் கொண்டிருந்தது போல அதன் மேல் பாயும். உண்மையிலே அவற்றில் பல ஈக்கள் வெகு தொலைவிலிருந்து பல வீடுகளைக் கடந்து இறைச்சியிடம் பறந்து வந்திருக்கும்.

மாடுகளுடைய மூக்குகளையும் தோலையும் கடித்துப் பிடுங்கும் குருட்டு ஈக்கள் சில வேளைகளில் தங்கள் இரையை இருபது கற்கள் தொலைவிலிருந்து பறந்து வந்து தாக்கும்.

பிணந்தேடி வண்டுகள் பத்து – பதினைந்து நிமையங்களுக்கு முன் கொல்லப்பட்ட பறவையை வெகு தொலைவிலிருந்து பறந்து வந்து மொய்ப்பதைச் சிலர் பார்த் திருக்கலாம். உடல் அழுகக் கூடத் தொடங்காத போதே வண்டுகளும் ஈக்களும் செத்த பறவையை நோக்கிப் பறந்து வரும்.

பாலை நிலங்களில் வணிகக் கூட்டத்தின் ஒட்டகங்கள் மலங் கழித்ததும் தூய(புனித) சாணி வண்டுகள் எனப்படும் பெரிய வண்டுகள் எங்கிருந்தோ அதை நோக்கிப் பறந்து வருமாம்.

பூச்சிகளின் இந்த வியப்பூட்டும் தனிப் பண்புக்குக் காரணம் அவற்றின் நுண்ணுணர் வுள்ள நரம்பணுக்களே.

இவை உணர்வுக்


கொம்புகளின் அடிக் கணுவின் அருகே உள்ள கோப்பை வடிவக் குழிகளில் அமைந்திருக்கின்றன.

ஆண் வண்ணத்துப் பூச்சிகள், விட்டில்கள், சில வண்டுகள், பிற பூச்சிகள் ஆகியவற்றின் உணர்வுக்கொம்புகள் சீப்பு வடிவானவை. அதாவது அவை சீப்புப் பற்களை ஒத்திருக்கின்றன. இவ்வுறுப்பின் இந்தக் கட்டமைப்பு அதன் நுண்ணுணர்வுப் பரப்பைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது.

காற்று பல அயிரமாத்திரி தொலைவிலிருந்து இந்தப் பூச்சிகளிடம் மணத்தை எடுத்துச் செல்கிறது. அது மணம் தவிர வேறு எதையேனும் எடுத்துப் போகிறதா இல்லையா என்பது இதுவரை ஒருவருக்கும் தெரியாது.

ஆண் பூச்சிகள் பெண் பூச்சிகளையோ உணவையோ தேடிக் காற்றுக்கு எதிராக நெடுந் தொலைவு பறப்பதைக் கூர்ந்து கவனிப்போர் கண்டிருக்கிறார்கள்.

ஒருநாள் ஒரு சிறுவன் ஒரு சாணிக் குவியல் மேல் நீலப் பச்சை நிறமுடைய முப்பது ஈக்களைப் பிடித்தான். அவற்றின் மேல் மாவு தூவி, வெவ்வேறு தொலைவுக ளிலிருந்து ஐந்து ஐந்தாகச் சாணிக்



குவியலுக்குப் பறக்கவிட்டான்.

ஏறத்தாழ ஒரு அயிர மாத்திரி (கி.மீ.) தொலைவு எடுத்துப் போனாலுங்கூட ஈக்களால் சாணிக் குவியலைக் கண்டுபிடிக்க முடியும் என்று இதன் மூலம் அவன் மெய்ப்பித்தான். மாவு ஈக்களின் மயிரடர்ந்த உடல்களில் ஒட்டிக் கொண்டு அவற்றை அடையாளங் காண அவனுக்கு உதவிற்று.

பூச்சிகளின் உணர்வுக் கொம்புகள் மேல் மெழுகு பூசிவிட்டால், உணவு எவ்வளவு வலிய மணம் வீசினாலும் அவற்றால் அதைக் கண்டுபிடிக்கவே முடிவதில்லை என்று ஆய்வுகள் காட்டியுள்ளன.

*

# உங்கள் தலையிலென்ன களிமண்ணா ?

- மா. பூங்குன்றன்

சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பவர்களையோ, எண்ணாமல் தவறாகச் செய்பவர்களையோ பார்த்து எளிதாகக் கேட்கும் கேள்வி இதுதான்.

"உங்கள் தலையில் மூளைதான் இருக்கிறதா அல்லது உங்கள் தலையி லென்ன களிமண்ணா?"

மண்ணில் பலவகை உண்டு. உலகில் உள்ள தனிமங்களெல்லாம் இந்த மண்ணில்தான் கலந்திருக்கின்றன. குப்பை கூளங்கள் முதல் விலையுயர்ந்த மாழைகளான தங்கம், வெள்ளி மணிகளான மாணிக்கம், வயிரம், அனைத்தும் இந்த மண்ணில் நீக்கமறக் கலந்து உள்ளன. ஆங்காங்குத் திட்டு திட்டாகவும் மண்ணொடு மண்ணாகக் கலந்தும் இவை கிடைக்கின்றன.

இந்த மண் ஆற்றங்கரை கடற்கரை போன்ற நீர்நிலைக் கருகில் மணலாகவும் அதே நீர்நிலைக்கருகில் குழைந்து களிமண்ணாகவும் கிடைக்கிறது.

நீரோடு கலந்து படிக வடிவில் உள்ள மண்தான் மணல்.

படிக வடிவிழந்து இருந்து குழைவுள்ள மண்ணும் பிற மட்கு பொருள்களும்தான் களிமண்.

மண் அனைத்தும் பொருளுடன் கலந்து மட்கக் கூடிய தன்மை வாய்ந்தது. படிகமாகி விட்ட மண் மணல். மணல் படிகமானபின் எளிதில் பிறபொருள்களுடன் கலக்காது. வேதி மாற்றம் நிகழ்ந்தாலொழிய மணல் மணலாகவே இருக்கும்.

மணலின் வேதிப் பெயர்தான் சிலிக்கன்-டை-ஆக்சைடு. சிலிக்கா என்பதே மூலப்பொருள்.

எல்லா இடத்திலும் மணல் தூய வேதிப் பொருளாக இருப்பதில்லை அதனுடன் மாழைப் பொருள்கள் பல கலந்திருக்கும்.

இரும்பு கலந்த பாறை கருப்பு நீல நிறத்திலும் அலுமியம் கலந்த பாறை செந்நிறத்திலும் தங்கம் கலந்த பாறை சற்று மஞ்சள் நிறத்திலும் காணப்படும்.

தூய்மையான மண் கண்ணாடியாகும். மண்ணுடன் அதன் ஒவ்வொரு தனிமக் கலப்புக்கும் வண்ணமும் தன்மையும் மாறும்.

ஒரு குறிப்பிட்ட தனிமக் கலப்புள்ள மண் படிகமாகும் பொழுது மின் கடத்து தன்மையில் அது வேறுபடுகிறது. ஒருபுறமிருந்து மின்சாரம் கடத்துகிற நிலையில் மறுபுறமிருந்து கடத்தாத நிலை ஏற்படுகிறது. இதைத்தான் அரைக் கடத்திகள் (Semi Conductors) அல்லது குறைக் கடத்திகள் என்று கூறுவர்.

இந்தக் குறைக்கடத்திகள்தாம் இன்றைக்குக் கணிப் பொறிக்கு மிகவும் அடிப்படையாக நிற்கிறது.

நம் மூளையில் உளள தசைக் கண்ணறைகளின் மின்துடிப்பு வழியாகவே குறைவான மின்துடிப்புகள் கடத்தப்படுவதாலும் அல்லது கடத்தப் படாததாலுமே செய்கைகள் உடல் முழுவதும் சென்று உடலை இயக்குகிறது. நினைவாற்றல் இருப்பு காக்கப் படுகிறது.

இன்றைக்கு இடதுபக்க மூளை அமைப்பிலேயே கணிப்பொறி செய்யப்பட்டுள்ளது. அக்கணிப்பொறிகளில் மூளைக் கண்ணறைகள் நுண் தசைத்திரளால் ஆனது போல் கணிப்பொறியில் மட்படிகத் (Silicon) தால் ஆன குறை ஆற்றல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றின் மின்கடத்தல் கடத்தாமை குறிப்புகளாலேயே நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.


மூளை எவ்வாறு தசைப் பொருள்களால் ஆனதோ அதே போல் மண் பொருள்களால் ஆன மூளைதான் கணிப்பொறி.

மண்பொருள்களாலும் மூளையை ஆக்க முடியும் என்பது இன்றைய அறிவியல் வளர்ச்சி.

இனி யாரேனும் உங்கள் தலையிலென்ன களிமண்ணா என்று கேட்க முடியுமா?

# கால்பந்தாட்டம்

—பாவலர் இளஞ்சித்திரன்—



கால்பந் தாட்டம்! கால்பந் தாட்டம்!
  கால்கை வளர்ச்சிக் கூட்டம்!
தோல்பந் தாட்டம்! துடிதுடிப் பாட்டம்!
  சுறுசுறுப் பிருக்கும் ஆட்டம்!

ஓட்டம் இருக்கும்; உதைபந் தாட்டம்!
  உடல்முறுக் கேற்றும் ஆட்டம்!
நாட்டம் இருக்கும்; ஊக்க ஆட்டம்!
  நரம்பெலாம் இயங்கும் ஆட்டம்!

வெயர்வை வரவர ஆடும் ஆட்டம்!
  வீர விளையாட் டாட்டம்!
அயர்வே தெரியா தாடும் ஆட்டம்!
  அச்சம் ஒழித்த ஆட்டம்!

அணியணி யாக ஆடும் ஆட்டம்!
  அலைந்துபந் தெடுக்கும் ஆட்டம்!
மணிமணி யாய்ப்பந் துதைக்கும் ஆட்டம்!
  வானைத் தொடும்பந் தாட்டம்!

பந்தில் கைப்படா தாடும் ஆட்டம்!
  பறந்துபந் தடிக்கும் ஆட்டம்!
மந்தத் தனமிலா தாடும் ஆட்டம்!
  மண்மேல் கால்பந் தாட்டம்!

*



த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு

# அரியலூர் ஆசிரியரின் அரும்பணி.

அரியலூர் அரசுப் பள்ளியில் ஆசிரியராக இருப்பவர் அரங்கநாடன். இந்த ஆண்டு தம் பளளிக்கூடப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு 'பாடவேளை அட்டை'யைக் கொடுத்துள்ளார்.

தூய தமிழில் அந்த அட்டை இருப்பதுடன், நம் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்' எனும் பாடல் அதன் பக்கத்தில் அச்சிடப் பட்டுள்ளது.

அரங்கநாடனின் தமிழ்ப் பணிக்கு வாழ்த்துகள்!



1933 - 1995

## மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்!

மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்
காண்பன எல்லாம் கலைநா கரிகம்!
மாண்பெனப் படுவது மனநா கரிகம்!
அடையும் மாற்றம் அனைத்தும் ஒப்பலாம்!
உடையும் நடையும் மாறலாம்; ஆனால்
உள்ளமும் ஒழுங்கும் உயர்ந்தே இருப்பன
பள்ளி என்பதோ ஒழுக்கம் பயிலிடம்!
துள்ளும் இளமையின் துடுக்கை அடக்கி
விள்ளும் அறிவெலாம் விளங்கக் கற்றிடும்
கல்விக் கூடம் கலைபயில் கழகம்!

இளமைக் கழகே கல்வியை ஏந்தல்!
கல்விக் கழகு கடமையும் ஒழுங்கும்!
ஒழுங்கில்லாக் கல்வி உப்பில்லாப் பண்டம்!

எண்ணறப் படித்தும் எழுத்தறக் கற்றும்
கண்ணெனும் ஒழுங்கும் கடமையுங் கல்லான்
மக்களில் தாழ்ந்தவன். எனவே மதிக்க!
தக்கவை இவற்றை உளத்து வை தம்பி!
மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.

பள்ளிப்பறவைகள்
பெருஞ்சித்திரனார்.

பெயர் : பிறந்த நாள் :
வகுப்பு : தேர்வு எண் :

| | க | உ | ங | ச | | ரு | சா | எ | அ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திங்கள் | | | | | | | | | |
| செவ்வாய் | | | | | | | | | |
| அறிவன் | | | | | | | | | |
| வியாழன் | | | | | | | | | |
| வெள்ளி | | | | | | | | | |



தமிழறிவு பெற 'தமிழ்ச்சிட்டு' படி!
பெயர், கையொப்பம், முகவரி தமிழில் எழுதுக!
தமிழுடன் வாழ்க! தமிழே துணை!